**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. NO. 139/2019**
**PW6**

| | | |
|---|---|---|
| Name | : | மஞ்சுளா |
| Father's/Husband's Name | : | சந்தக்கவுண்டர் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.12.2024.
Accused present.

**முதல் விசாரணை**

நான் ஆத்துவாம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்துபோன சேகர் என் மூத்தார் மகன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் இறந்துபோன சேகருக்கு பக்கத்து நிலத்துக்காரர். சேகருக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே வரப்பு சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. கடந்த 2017 ல் ஒரு நாள் என் மருமகள் ரேகா என்னிடம் எதிரியும் சேகரும் சண்டை டபோடுகிறார்கள் என்றும் அதனால் நிலத்திற்கு வருமாறு அழைத்தார். நான் சேகர் நிலத்திற்கு போனேன். அங்கு எதிரிக்கும் சேகருக்கும் இடையே சமாதானம் செய்துவிட்டு அங்கேயே இருந்தேன். எதிரி யும் அவர் மனைவியும் வீட்டிற்கு செல்வதுபோல் போய் ரேகா, சேகர் மற்றும் நான் பேசிக்கொண்டிருந்தபோது சிவராஜ் கொம்பு கொண்டுவந்து சேகரின் தலையில் அடித்தார். சேகர் கீழே விழுந்துவிட்டார். எதிரி சிவராஜ் மற்றும் அவர் மனைவி

சேகரை பார்த்தார்கள். பின்னர் அங்கிருந்து போய்விட்டார்கள். நான் ரேகாவிடம் அவர் அண்ணனுக்கு போன் செய்ய சொன்னேன். பின்னர் ராஜேசேகர், முருகன், வெங்கடேசன், சிவக்குமார் ஆகியோர் அங்கு வந்தார்கள். அப்போது சேகர் மூச்சு பேச்சு இல்லாமல் ரத்த வெள்ளத்தில் இருந்தார். சிவக்குமார் ஆம்புலன்சுக்கு போன் செய்தார். பின்னர் வேலூர் மருத்துவக்கல்லூரி மருததுவமனைக்கு ரேகாவும்சிவக்குமாரும் அழைத்துச்சென்றார்கள். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் சேகர் கோமா நிலைக்கு போய்விட்டார் என்றும், அவர் பிழைக்கமாட்டார் என்றும் சொல்லிவிட்டார்கள். அங்கு 3 வது நாளில் சேகர் இறந்து விட்டார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆத்துவாம்பாடி கிராமத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சேகர் நிலத்திற்கும் இடையே 2 கி.மீ இருக்கும் என்றால் சரியல்ல. 1 கி.மீ இருக்கும். என்னிடம் சேகரும் , எதிரியும் சண்டை போட்டுக்கொண்டிருப்பதாக போனில் சொன்னபோது மாலை 07.00 மணி இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு நடந்து செல்ல 1/2 மணி நேரம் ஆனதா என்றால் சுமார் 10 நிமிடம் ஆனது. நான் பக்கத்து நிலத்தில்தான் இருந்தேன். சம்பவம் நடந்த அன்று இரவு 10.00 மணிக்கு போலிசார் என்னை எதிரில் உள்ள ரோட்டிற்கு அழைத்து விசாரித்தார்கள் . எதிரியின் நிலம் இறந்துபோன சேகரின் நிலத்திற்கு வடக்கே உள்ளது என்றால் சரிதான். அது சேகர் நிலத்தை விட சுமார் 5 அடி உயரத்தில் உள்ளது என்றால் சரிதான். சேகர் வீட்டிற்கு கிழக்கு பகுதியில் கற்பாறை, மரங்கள் உள்ளது என்றால் சரிதான். சேகர் வீட்டு வாசல் சிமெண்ட் தரையால் ஆனது என்றால் இல்லை. மண் தரை மட்டுமே உள்ளது. சேகரின் வீட்டிற்கு எதிரே 4 அடி ஆழம் கொண்ட ஒரு ஓடை உள்ளது என்றால் சரிதான். அந்த ஓடையில் கிணற்றில் இருந்து எடுக்கப்பட்ட வெட்டுக்கற்கள் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சேகருக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் சரிதான். தற்போது சாட்சி எப்போதாவது குடிப்பார் என்று கூறுகிறார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று சேகர் அளவுக்கு அதிகமாக குடித்திருந்தார் என்றால் சரிதான். என்னை ரோட்டிற்கு அழைத்து போலிசார் விசாரித்தபின்னர் மீண்டும் விசாரிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னவாறுதான் போலிஸ் விசாரணையிலும் சொன்னே. நான் சொல்லும் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

எனக்கு சம்பவத்தைபற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இறந்த சேகர் என் மூத்தார் மகன் என்பதால் ரேகா கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சேகர் குடிபோதையில் ஓடையில் இருந்த வெட்டுக்கல்லின் மீது விழுந்து காயம் அடைந்து இறந்துபோனார் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath., M.L.,**
Additional District Judge,
Tiruvannamalai.